**சுருக்கம்**

கைத்தறித் தொழில் – ஈரோடு கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம் – பயிற்சிகால உதவித் தொகையினை நாளொன்றுக்கு ரூ.80/–லிருந்து ரூ.150/–ஆக உயர்த்தி வழங்க அனுமதித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை,**

அரசாணை (நிலை) எண். 89

நாள் 09.05.2013
விஜய, சித்திரை 26
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கவும்:

1. அரசாணை (நிலை) எண்.145, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை நாள் 29.09.2008.
2. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதம் எண்.23374/2009/ஜி3, நாள் 12.09.2012.

ஆணை:

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கைத்தறி நெசவாளர்களுக்கு கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையில் புதிய வடிவமைப்புகள் குறித்து பயிற்சி அளிக்கும் பொருட்டு ரூ.25.71 இலட்சம் மதிப்பில் ஈரோடு கைத்தறி நெசவாளர் பயிற்சி மையம், 12.03.2010 அன்று தொடங்கப்பட்டு தொடர்ந்து பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

2) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், இப்பயிற்சி மையத்தில் இதுவரை 18 கட்டங்களாக 118 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களைச் சார்ந்த 829 நெசவாளர்களுக்கு பயிற்சி வழங்கபட்டுள்ளது எனவும் ஈரோடு கைத்தறி நெசவாளர் பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் ஒவ்வொரு நெசவாளருக்கும் பயிற்சி கால உதவித் தொகையாக நாளொன்றுக்கு ரூ.80/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது எனவும் பொதுவாக நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் ஒரு நாளுக்கு நெசவுக்கூலியாக அவரவர் நெய்யும் இரகத்திற்கு ஏற்ப குறைந்த பட்சம் ரூ.150/– கூலி பெற இயலும் என்றும் தற்போது விலைவாசி உயர்ந்துள்ளதாலும், பயிற்சி பெறும் நெசவாளர்கள் தினமும் 25 கி.மீ முதல் 45 கி.மீ வரையிலான தூரத்திற்கு போக்குவரத்துக் கட்டணம் செலுத்தி பயிற்சிக்கு வந்து செல்ல வேண்டியுள்ளதாலும், பயிற்சிக் காலத்தில் நெசவாளர்களுக்கு நெசவுக்கூலி மூலம் வருமானம் கிடைக்க வழியின்றி பயிற்சிகால உதவித் தொகையை மட்டுமே நம்பியுள்ளதாலும், ஒரு நாளுக்கு பயிற்சி கால உதவித் தொகையாக ரூ.150/– வழங்கக் கோரும் நெசவாளர்களின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

3) மேலும், இலாபகரமாக இயங்கி வரும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்ஆண்டுதோறும் இலாபப் பிரிவினையில் 3 சதவிகிதத்தினை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு

/ த.பி.பா./

ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கும், 2 சதவிகிதத்தினை கூட்டுறவு கல்வி நிதிக்கும் வழங்கி வருகின்றன எனவும், மேற்படி கூட்டுறவு கல்வி நிதியிலிருந்து நெசவாளர்கள் கோரும் கூடுதல் பயிற்சி கால உதவித் தொகையை வழங்குவதால் அரசுக்கு நிதிச் சுமை ஏற்பட வாய்ப்பில்லை எனவும் ஈரோடு கைத்தறி நெசவாளர் பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பயிற்சி காலத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பயிற்சி கால உதவித் தொகையை நாளொன்றுக்கு ரூ.80/– லிருந்து ரூ.150/– ஆக உயர்த்தி வழங்க அனுமதித்து ஆணை வழங்குமாறும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4) மேற்காணும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலித்து, ஈரோடு கைத்தறி நெசவாளர் பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் நெசவாளர்களுக்கு பயிற்சி கால உதவித் தொகையை நாளொன்றுக்கு ரூ.80–லிருந்து ரூ.150/– ஆக உயர்த்தி வழங்கவும், அவ்வாறு, ரூ.70/–ஐ உயர்த்துவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு கல்வி நிதியிலிருந்து பெற்றுக்கொள்ள அனுமதி அளித்தும் ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ. சந்தானம்
அரசு செயலாளர்

பெறுநர்:–
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், சென்னை – 600 108.
தனி அலுவலர்,
தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்,
என்.ஜி. நடராசன் மாளிகை,
70, பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை,
கீழ்பாக்கம், சென்னை – 600 010.
மாநில தலைமைக் கணக்காயர் (A & E) சென்னை – 600 018/ (பெயரில்)
மாநில தலைமைக் கணக்காயர் (CA), சென்னை – 600 018/ (பெயரில்)
மாநில கணக்காயர் (CAS), சென்னை – 600 009
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை – 600 001

**நகல்:–**
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (/கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
நிதித் துறை (வ.செ பொது–I, II) / வ.செ.ஒ/வ.வ/தொழில்), சென்னை–9
அரசு செயலர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின்
தனிச் செயலர், சென்னை – 600 009
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (பி1) துறை, சென்னை – 600 009

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்